பெரியபாளையம் பவானி அம்மன் கோயில் வருவாய்

* 862. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொன்னலூர்ப்பேட்டை பெரியபாளையம் பவானி அம்மன் கோயில் வருவாயைக் கொண்டு ஓர் அனாதைச் சிறுவர் இல்லம் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஆம் என்று சொன்னதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அந்த ஆலயத்தைப் பார்த்திருக்கிறார்கள். ஆண்டவனின் குழந்தைகளாக இருக்கும் அனாதைகளுக்கு விடுதி துவக்க இருப்பதாகச் சொன்னார்கள். அந்த விடுதியை இந்த ஆண்டே, தொடங்கப் போகிற கல்வி ஆண்டிலேயே, இந்த ஜூன் திங்களிலேயே துவக்கி அதை அமைச்சர் அவர்கள் கையாலேயே திறந்து வைக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அனாதை இல்லம் துவக்கலாமா என்று அறங்காவலர்களைக் கேட்டோம். அறங்காவலர்கள் ஒப்புதல் தந்து இருக்கிறார்கள். விரைவில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, அந்த பவானி அம்மன் கோவிலுக்கு ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே. 1968-ம் ஆண்டில் ரூ. 67, 865-ம், 1969-ல் ரூ. 88,230-ம், 1970-ல் 81,566-ம் வருமானமாக வந்திருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister whether any representation has been made by Thiru Raghava Reddi, ex-M.L.A., regarding the administration of this temple and the action taken thereon?

1972 எப்ரல் 3]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போடவும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இப்படிப் பட்ட கோவில்களுக்கு வருகிற வருமானத்தையெல்லாம் அந்தக் கோவிலின் முன்னேற்றத்திற்குச் செலவழிக்காமல், சில சமயங்களில் வேறு பல கோவில்களுக்கு அந்தப் பணத்தை டைவர்ட் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்தந்தக் கோவில்களுக்கு வருகிற வருமானத்தை அந்தந்த கோவில்களுக்கே செலவழிக்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, உபரி நிதியைத்தான் வேறு கோவில்களுக்கு நாம் கொடுக்கிறோம்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, பெரிய பாளையம் ஆலயம் அரசாங்கத்தின் அறங்காவல் துறையின் கீழ் இருக்கிறதா ? அல்லது தனிப்பட்டவர்களின் ஆளுகையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்த ஆலயம் அறங்காவல் துறையின் ஆளுகையின்கீழ் இருக்கிறது. நம்முடைய அரசாங்கம் தான் அந்த ஆலயத்திற்கு அறங் காவலர்களை நியமிக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய இந்தக் கோவிலைப் பற்றி பல குறைபாடுகள் எல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே. இப்போது இருக்கக்கூடிய அறங்காவலர்களை மாற்றி அமைக்கும் ஆலோசனை அரசுக்கு உண்டா.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்தக் கோவில் நிர்வாகத்தைப் பற்றிய குறைபாடுகள் ஏதும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படி ஏதாவது வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அறங்காவலர்கள் மாற்றுவது என்பது, அவர்களுடைய காலவரையரை முடிவடைந்த பிறகு யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

(2) அமைச்சர் அறிக்கை

முன்னாள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் பத்திரிகைக்கு அளித்த செய்தி குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது 82-வது விதியின் கீழ் இப் பேரவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்.

THIRU K. T. K. THANGAMANI : I have written a letter to the Hon. Chief Minister with a copy to you, Sir. There are three or four issues which are now being commented in the Press. One is concerned with Hon. Chief Minister and other Ministers also. When the Hon. Chief Minister makes his statement under Rule 82, if he could touch upon those points also, it will be better.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, 30-3-1972-ஆம் நாள் சட்டப் பேரவையில் நிதி ஒதுக்கீடு மசோதாவில் பேசும்போது திருவண்ணாமலை நகரத்தில் 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற அமளியில் தி.மு. கழகத்தினர் நாற்பத்தி எட்டுப் பேரும், காங்கிரஸ் கட்சியினர் இருபது பேரும் கைது செய்யப்பட்டு வழக்குப் போடப்பட்ட தென்றும். அன்றைய முதலமைச்சர் பக்தவச்சலம் அவர்களின் உத்திரவுப்படி காங்கிரஸ்காரர்கள் மீது மட்டும் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு, கழகத்தினர்கள் வழக்கில் தண்டிக்கப்பட்டார்கள் என்றும் குறிப்பிட்டேன்.

அத்துடன் திரு. பக்தவத்சலம் அவர்கள் அமைச்சராக இருந்த போதே அவரது குடும்பத்தில் நில உச்ச வரம்புச் சட்டக் கொள்கைக்கு மாறாக அந்தச் சட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு